REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 3உ வியாழன் (18—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 4உ வெள்ளி (19—7—57) [இதழ் 28

## 'ஸ்க்ரு லூஸ்'!

புதுடில்லி, ஜூலை 18—

மக்கள் சபையில் பொருத்தப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரம் ஏன் சரிவர வேலை செய்யவில்லை என்பதை, துணைத் தலைவர் சர்தார் ஹுகும் சிங் விளக்கினார்.

'இதற்குக் காரணம், சில உறுப்பினர்கள்தான்; அவர்கள் பொருத்தப்பட்டுள்ள பொத்தானை அழுத்துவதற்குப் பதிலாக அதற்குப் பக்கத்தில் உள்ள 'ஸ்குரூ' (திருகாணி)வினை அழுத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

# ஓர் புறம் கனரக இயந்திரத் தொழில் வளர்ச்சி— மறு புறம் கைராட்டை சுற்றக் கற்றுத்தரும் ஆதாரக் கல்வி!

## திகைப்பைத் தரும் இம்முரண்பாடு ஏன்?

### கல்வி வளர்ச்சிக்காக வரி என்றால் எதிர்க்கமாட்டோம்

### ஆனால் பெறவேண்டிய இடத்தில் பெற்றுத் தரவேண்டிய துறைக்குத் தாருங்கள்

*கல்வி மானியக் கோரிக்கை விவாதத்தில்*

## அண்ணா கருத்துரை

சென்னை, ஜூலை 17—

"எதற்கெடுத்தாலும், நாங்கள் வெள்ளையனைவிட மிக முன்னேறிவிட்டோம்,' என்று அடிக்கடி கூறுவதும், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் வெள்ளையர்கள் சார்பாகவே வாதாடுவதாகக் கூறுவதும், நடைமுறையிலுள்ள பிரச்சினையிலிருந்து நழுவி விடுவதற்குப் பயன்படுமே தவிர, உண்மையை நிலையை அறிவதற்கு நிச்சயமாகப் பயன்படாது எனவே, இந்தப் போக்கைக் கைவிட்டு, மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுகிறேன்.

"நாங்கள் வரி போடுவதையே எதிர்ப்பவர்கள் என்று கருதிக்கொண்டு, காங்கிரஸ் கட்சியின் கொரடா கொஞ்சம் கோபமாகக்கூட சபையில் பேசியதாக அறிகிறேன்; வரி போடாமல் அரசாங்கம் நடைபெற வேண்டும் என்று நாங்கள் கூறுபவர்கள் அல்ல; தாங்குபவர்கள் மீது வரி போடுவதை நாங்கள் எப்போதும் எதிர்க்க வில்லை—இப்போதும் எதிர்க்க வில்லை—இனி எப்போதும் எதிர்க்கவும் மாட்டோம். ஆனால் எந்த வரி விதிப்பையும் மக்கள் எதிர்க்கக் கூடாது என்று எதிர்பார்ப்பது ஜனநாயகப் பண்புக்குப் புறம்பானதாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். வரி போடுவதால் ஏற்படும் பலன் என்ன என்பதைக் கவனித்து, அவசியமானால் எதிர்க்கிறோம்.

"நாட்டில் ஒருபுறம் விஞ்ஞானத்திற்கும் தொழில் முன்னேற்றத்திற்கும் பணம் செலவழிக்கப்படுகிறது; மறுபுறம் 'கிராம சுயராஜ்ய'த்திற்குப் பணம் செலவழிக்கப்படுகிறது; இதைக் கண்டு நானும் திகைக்கிறேன்—நாட்டு மக்களும் திகைக்கிறார்கள்; ஒருவேளை இத்தகைய திட்டத்தைப் புகுத்துபவர்களுக்கு விளங்கலாம்—எங்களுக்கு விளங்கவில்லை—நாட்டு மக்களுக்குத் தெரியவில்லை; இதற்குத் தக்க விளக்கத்தை நிதி அமைச்சர் தருவாரென எதிர்பார்க்கிறேன்.

"கல்வித் துறையில் பெரிய மாற்றங்கள் துரிதமாக ஏற்பட வேண்டும்; அதற்காகப் புதுவரிகள் போட வேண்டிய நிலை ஏற்பட்டால், வரிவிதிக்க நிச்சயமாகத் தயங்க வேண்டாம் என்று கூறுவதோடு அதை என் கட்சி வரவேற்கும்—முழு ஆதரவு தந்து ஒத்துழைக்கும் என்று கூறிக் கொள்கிறேன்; ஆனால், யாருக்கு வரி போட வேண்டுமோ அதை மனதில் கொண்டு செய்ய வேண்டும்—'பெற வேண்டிய இடத்தில் பெற்று, தர வேண்டியதுறைக்குத் தாருங்கள்,' என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

"எதிர்க் கட்சியினர் கூறும் யோசனைகளை ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொள்வதில்லை என்றாலும்—எங்கள் கருத்துக்களுக்கு மதிப்பு தரப்படுவதில்லை என்றாலும், நாங்கள் பொறுமையை இழக்காமல் சொல்லுவோம்—சொல்லிக்கொண்டே இருப்போம்"

*—என்று அண்ணா அவர்கள், சட்ட சபையில், கல்வி இலாகா மானியக் கோரிக்கை வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டார்.*

மேலும், அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தக் கல்வி மானியத்தின் மீது கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரரேபணையில் நான் கலந்துகொள்வதற்கு முக்கியக் காரணம், கல்வி முன்னேற்றத்தில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான்; இந்த வெட்டுப் பிரரேபணை கொண்டுவரப்பட்டதின் நோக்கமும் அதுதான்.

"இப்போதைய அரசாங்கத்திடமும், அமைச்சரிடத்திலும் நாங்களும், நாட்டு மக்களும் இந்தத் துறையில் அதிகமான நன்மையை எதிர்பார்க்கிறோம்.

"நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசாங்கம் செய்யக் கூடியவற்றில் உள்ள சில பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், மேலும் அதிக நன்மைகளைச் செய்வதற்கு ஊக்கமளிக்கவேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும்; வெறும் குற்றங் குறைகளைக் கூறுவது எங்கள் வேலையல்ல!

"அமைச்சர் அவர்கள் பேசுகையில் 1934 முதல் 1957 வரை கல்விக்காக ஒதுக்கப்பட்ட மானியம் எப்படிப் படிப்படியாக வளர்ந்துகொண்டே வந்துள்ளது என்பதை அழகாக எடுத்துச் சொன்னார்கள்; ஆனால், ஆண்டு தோறும் கல்வி மானியம் வளர்ந்தது போன்றே, மக்கள் தரும் வரிப் பணமும் ஆண்டுதோறும் வளர்ந்துள்ளது என்பதையும் எண்ணிப்பார்க்கவேண்டுகிறேன்.

"1934ல், ஆரம்பப்பள்ளி மாணவர் ஒருவருக்கு செலவிடப்பட்ட ரூ. 7 இப்போது (1957—58ல்) உயர்ந்து, ரூ. 30 ஒவ்வொருவருக்கும் செலவழிக்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். இது உண்மையில் வரவேற்கத் தக்கதாகும்; ஆனால், பொருளாதாரத் தத்துவப்படி 1934-ல் இருந்த மதிப்புத்தான் இப்போது நான்கு மடங்காகி இருக்கிறது என்பதையும் கருத்தில் வைக்க வேண்டுகிறேன்.

"எல்லாச் செலவினங்களும், பொருள்களின் மதிப்பும் அப்போதிருந்ததைவிட இப்போது நான்கு மடங்காக உயர்ந்துள்ளதைக் கணக்கிடும்போது, இப்போதைய அதிகச் செலவின் மதிப்பைக் கொண்டு பெருமைப் படுவதற்கு இயலவில்லை.

"அமைச்சர்களின் ஊதியத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கு இந்தியப் பிரதமர் கராச்சி தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய கருத்தை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுகிறேன். எனவே, இத்துறையில் ஏதோ முயற்சி செய்துள்ளார்கள் என்றுதான் கூற வேண்டுமே தவிர, பாராட்டத்தக்க அளவில் இல்லை என்றே கூற விரும்புகிறேன்.

"நாட்டில் 1934-ம் ஆண்டுக்கும், 1956-ம் ஆண்டுக்கும் உள்ள மாறுபாட்டை மக்கள் உணருகின்றனர்; அதனால்தான் மக்கள் மேலும் அதிக நன்மையை எதிர்பார்க்கிறார்கள்.

"அடிமைப்பட்ட இந்தியாவில் எல்லோரும் படிப்பது வெள்ளைக்காரனுக்கு ஆபத்தாக இருந்தது; ஆனால் இப்போது, எல்லோரும் படிப்பது அரசாங்கத்திற்கு நிச்சயமாக நன்மை பயக்கும் ஆகையினால்தான், இத்துறைக்கு மேலும் அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

"எல்லோரும் படிக்க வேண்டுமென்றால் ரூ. 9 கோடி தேவைப்படும் என்று நிதி அமைச்சர் கூறினார்; அது எங்களுக்கும் தெரியும்; ஆனால், சென்னை சர்க்காரிடம் நிதி அதிகமாக இருப்பதற்கு, கேட்டதைத் தரும் 'அலாவுதீனின் அற்புத விளக்கு' இல்லை என்பதும் எங்களுக்குத் தெரியும்.

"ஆரம்பக் கல்விக்காக ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை அதிகமா, குறைவா என்று சிந்திப்பதைவிட ஒதுக்கப்பட்டுள்ள தொகையை

(4-ம் பக்கம் பார்க்க.)

## நெய்வேலித் திட்டப் பகுதியில் விவசாயிகளை வெளியேற்றும் கொடுமை!

*நிலையை விவாதிக்க செல்வராஜ் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணை*

### சட்ட சபைத் தலைவர் நிராகரித்தார்

சென்னை, ஜூலை 17—

"நெய்வேலித் திட்டப் பிரதேசத்தில் இரண்டு கிராமங்களை சேர்ந்த விவசாய மக்களை முன்னறிவிப்பு ஏதுமின்றி சர்க்கார் வெளியேற்றிவிட்டதால் பெரும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்; அது குறித்து விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும்"

என்று கோரி சட்ட சபையில் கழக உறுப்பினர் தோழர் எம். செல்வராஜ் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டுவந்தார்.

"விவசாயிகளின் அவல நிலை, இந்தத் தீர்மானத்தை கொண்டுவரத் தூண்டியுள்ளது; எனவே, இதனை ஏற்க வேண்டும்"

என்றும் தோழர் செல்வராஜ் எடுத்துரைத்தார்.

ஆனால் ரெவினியூ மந்திரி மாணிக்கவேலரோ, ஒத்திவைப்புப் பிரேரபணைக்கு அவசியமில்லை என்றும், உறுப்பினர் குறிப்பிடுகிற பிரச்சினை அன்றாட நிர்வாகத்தில் சகஜமானது என்றும், இது குறித்து, பட்ஜெட் விவாதத்திலேயே பேசலாம் என்றும் கூறியிருக்கிறார்.

அதன் பேரில் சபைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ், தீர்மானத்தை தள்ளுபடி செய்துவிட்டார்.

# இந்தியா ஒரே நாடு என்று கருதுகிறவர்களுக்கு இந்தி ஆதிக்க மொழி அல்லவாம்

## தமிழ் நாடு தனி நாடாயிருந்தால் இந்தியை ஒதுக்கிவிடலாமாம்

### இல்லாதவரை இந்திமொழி அறிவு அவசியமாம்

*க. அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் பதில்*

சென்னை, ஜூலை 17—

"இந்தி மொழி அறிவு பெறாதவர்கள், மத்திய சர்க்கார் உத்தியோகம் பெறமுடியாது என்று மந்திரி கூறினார்; அப்படியானால், கடந்த காலத்தில் ஆங்கிலம் இருந்ததைப் போன்றே, இந்தியையும் ஒரு ஆதிக்க மொழி என்று அமைச்சர் ஏற்றுக்கொள்கிறாரா?"

என்று, தோழர் க. அன்பழகன் அவர்கள் சட்டசபையில் ஒரு கேள்வியை எழுப்பினார்.

பதிலளித்த நிதி மந்திரி சுப்பிரமணியம் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாடு தனி நாடாக இருந்தால், நாம் இந்தியைப் புறக்கணிக்கலாம்; ஆனால், இந்தியா ஒரே நாடாக இருக்கும்வரை, இந்தியா முழுவதற்குமாக ஒரு தேசிய மொழி இருந்தாக வேண்டும்.

"அரசியல் சட்டத்தின்கீழ் வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்று கருதுகிறவர்கள், இந்தி மொழியையும் ஒரு ஆதிக்க மொழியாகக் கருதலாம்; ஆனால், 'இந்தியா ஒன்று,' என்று கருதுகிறவர்களுக்கு இந்தி தேசியமொழியாகும்."

கல்வி இலாகா மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மந்திரி சுப்ரமணியம், இந்தி மொழிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறவர்கள், தமிழ் நாட்டில் மிகப் பெரிய எதிரிகள் என்றும், இந்தி கற்றுக்கொள்ளாவிட்டால் டெல்லி சர்க்காரில் உத்தியோகம் கிடைக்காது என்றும், இப்போது இந்தியைப் புறக்கணித்துவிட்டு, பின்னர் தமிழ் நாடு பின்தங்கி விட்டதே என்று வருந்தக்கூடாது என்றும், எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தவரும் பிறரும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் கைவிட வேண்டும் என்றும் கூறினாராம்!

தொடர்ந்து பேசிய அவர், உறுப்பினர்கள், இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் படைத்தவர்கள் என்றும், டெல்லியில் உத்தியோகம் வேண்டாம் என்றால் அவர்கள், இந்தியை எதிர்க்கலாம் என்றும், ஆனால், இந்தியைப் புறக்கணிப்பதால் வரும் விளைவுகளைத் தீர்க்கமாக எண்ணிப் பார்க்க வேண்டும்!

மூன்றாம் படிவம் வரை, இலவசக் கல்வி தரும் திட்டம் ஒன்றை சர்க்கார் பரிசிலித்து வருவதாகவும் அவர் கூறினார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18—7—57 வியாழன்

# பத்தாண்டு பயிற்சியின் எதிரொலி!

இரண்டாவது சட்ட மன்றம் என அழைக்கப்படும் மேல் சபையை, 'முத்தண்ணுக்கள் சபை' எனக் காங்கிரசுக் கட்சியினர் கேலி செய்துவந்த காலம் ஒன்று இருந்தது. தம் 'எடுபிடி'களுக்குச் சலுகை காட்டுவதற்கும், பகட்டான வாழ்வைத் தேடித் தருவதற்கும் என்றே மேல் சபை அமைப்பை வெள்ளை ஏகாதிபத்தியம் உருவாக்கிப் பாதுகாத்து வருவதாக, பத்தாண்டுகளுக்கு முன்னர் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் கனல் கக்கப் பேசிவந்தனர். அக்காலத்தில் மேல் சபையில் இடம் பெற்றிருந்தவர்களை எல்லாம் 'ஏகாதிபத்தியதாசர்கள்—கூலிகள்' என்றும் நாத்தழும்பேற பேசிப் பூரித்தனர், காங்கிரசுக் குணவான்கள்!

ஆனால் அந்தக் காலம் இன்று மலையேறிவிட்டது. அன்று வேண்டாம் எனத் தங்களாலேயே கூறப்பட்டுவந்த மேல் சபைக்காகப் பரிந்து பேச வேண்டிய கட்டாயத்திற்கு இன்று காங்கிரசுக் கட்சியினர் வந்துள்ளனர். மேல் சபை ஏற்பாடு வீண் செலவு—மக்கள் வரிப்பணம் அதனால் பாழாகின்றது—அதை ஒழித்துவிட்டு அச்சபையில் இன்று இடம் பெற்றுள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களையும் சட்ட மன்றத்திலேயே நியமனம் செய்ய வேண்டும் என எதிர்க் கட்சியினர் வாதாடுகின்றனர். ஆனால் காங்கிரசு ஆளவந்தார்களோ, தக்க பதில் கூற வகை தெரியாது விழித்து மேல் சபை இருந்தேயாக வேண்டும் எனப் பேசுவதுடன் இருந்து வருகின்றனர். பரிதாபமாகத்தான் இருக்கின்றது அவர்கள் போக்கு!

ஒருகாலத்தில் தங்களால் வேண்டவே வேண்டாம் என வெறுத்துக் கூறப்பட்டுவந்த ஒன்றை, எதிர்க் கட்சியினர் வேண்டாம் எனக் கண்டிப்பாகக் கூறுகின்ற நிலையிலும், இருந்துதான் ஆகவேண்டும் எனப் பிடிவாதமாகக் கூறிவருவது, தாங்கள் கடந்த பத்தாண்டுக்காலமாகப் பெற்றுவந்துள்ள அனுபவத்தைக் கொண்டே காங்கிரசு ஆளவந்தார்கள் கூற முன்வருகின்றனர் போலும்!

★

கவர்னர் அமைப்பு குறித்தும் அவருக்கு வாரி வழங்கப்பட்டுவந்த பெருந்தொகை செலவு குறித்தும், அவர் குடியிருந்துவந்த கோட்டை போன்ற பெரிய மாளிகை குறித்தும், அவருடைய பரிவாரங்கள் குறித்தும், அதற்காகக் கொட்டி அழப்பட்டுவந்த செலவு குறித்தும், அந்தக் காலத்தில்காங்கிரசுக் கட்சியினர் கரடியாகக் கத்தினர்.

ஒரு மனிதனுக்கா இத்தனை ஆடம்பரம்—இத்தனைப் பெரும் மாளிகை—இவ்வளவு பரிவாரம்—இவ்வளவு பாதுகாப்பு—இவ்வளவு பெருந்தொகை செலவு—என்றெல்லாம் அன்று காங்கிரசுக் கட்சியினர் கரடியாகக் கத்திவந்தது, இன்னும் நமது காதுகளில் குடைந்துகொண்டுள்ளது. கவர்னருக்கு ஒதுக்கப்படும் விருந்து செலவைச் சுட்டிக்காட்டி, இவ்வளவு பெருந் தொகையையும் ஒரு மனிதனா தின்று ஏப்பமிட்டு வருகிறான்—அவன் என்ன பகாசூரனாக இருப்பானோ என்றெல்லாம்கூட, காங்கிரசு கோடையிடிகளும், வெட்டுக்கிளிகளும் காங்கிரசு மேடைகளில் கர்ணகடூரமாக அக்காலத்தில் பேசி மகிழ்ந்தன.

ஆனால், இன்றோ?

கவர்னர் அமைப்புக்கு அரசியல் தத்துவம் பேசவும், அதை மெய்ப்பிக்க மற்ற குடியாட்சிகளில் கவர்னர் அமைப்பு இடம் பெற்று இருப்பதை எடுத்துக் காட்டவும், காங்கிரசு ஆளவந்தார்கள் இன்று முன்வருகின்றனர். அதுவுமன்றி, கவர்னர் அமைப்பு கூடாது என எடுத்துரைக்கின்ற எதிர்க்கட்சியினர் மீது பாய்ந்து, 'அரசியல் சாத்திரம் அறியாத அறிவிலிகள் — கவர்னர் அமைப்பின் பொருள் விளங்கிக்கொள்ள முடியாத வீணர்கள்' என்றெல்லாம் ஏசவும், ஏளனம் பேசவும் காங்கிரசு அமைச்சர்கள் துணிந்துள்ளனர். அரசியல் வகுப்பு கூட நடத்த காங்கிரசு அமைச்சர்கள் முன்வருகின்றனர்.

அரண்மனையின் சிறு பகுதியில் கவர்னர் குடியிருந்தாலும், அன்னிய நாடுகளில் இருந்து வரும் அந்தஸ்து மிக்கவர்களுக்கு இடம் தர, அந்த அரண்மனை தேவைப்படுகிறது என்றும், கவர்னர் அரண்மனை தண்டச் செலவை ஆதரித்து அமைச்சர்கள் இன்று பேசுகின்றனர். மக்கள் வரிப் பணம் இலட்சக்கணக்கில் செலவழிக்கப்பட்டு வருவதற்கும், செலவுத் தொகையை இனவாரியாகப் பிரித்துக்காட்டி, அவைகளில் எது வீண் செலவு என்றும் கடாவுகின்றனர் காங்கிரஸ் அமைச்சர்கள்!

எந்த அமைப்பு கூடாது என்றனரோ, அதே அமைப்பு இருக்கவேண்டும் என எண்ணவும், அதற்காக வாதிடவும் காங்கிரசுக் கட்சியினர் இன்று முன்வந்திருக்கின்றனர் என்றால், அது எப்படி சாதாரண விஷயமாக இருக்கமுடியும்?

எண்ணெய் காணாத வரட்டுத் தலையையும், சோறு காணாத ஒட்டிய வயிற்றையும், ஒளியிழந்து குழிவிழுந்த கண்ணையும், கோவணம் கட்டிய திருக்கோலத்தையும், கல்லும் மண்ணும் உருகும்வண்ணம் சொல்மாரி பொழிந்து, கவர்னர் அமைப்பையும், அதற்காகச் செலவிடப்பட்டுவந்த பெருந் தொகையையும் அக்காலத்தில் கண்டித்து சண்டப்பிரசண்டம் செய்த அதே திருநாவால், கவர்னர் அமைப்பு இருந்தே ஆக வேண்டும் — அதற்காகப் பெருந்தொகை செலவிடத்தான்வேண்டும் எனப் புகழ்ந்து பாட காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வந்திருப்பதை, எவரால் கருதிப் பார்க்காமல் இருக்க முடியும்?

பாட்டைத் தலையை மறந்து பகட்டுத் தலைவரைக் காக்க காங்கிரசு ஆளவந்தார்கள் கொண்டுள்ள இன்றையத் திருக்கோலமும், சென்ற பத்தாண்டுகளாக அவர்கள் பெற்றுள்ள அரசியல் பயிற்சியின் விளைவு போலும்!

★

கோடைகாலத்தில் நீலமலை குடியேறுவது பற்றிய பிரச்சினையிலும், காங்கிரசு ஆளவந்தார்கள் இந்தப் பத்தாண்டுக் காலத்திற்குள் தலைகீழ் மாற்றம் பெற்றுவிட்டுள்ளனர்!

அந்தக் காலத்தில் கோடையில் நீலமலைக்குக் குடியேறும் அமைச்சர்களை, காங்கிரசு தலைவர்கள் கேலியும், கிண்டலும், கண்டனமும் செய்தது கொஞ்சமல்ல.

"ஊரார் பணத்திலே உலா வருகிறார்கள்—ஏழை மக்கள் வரிப்பணத்திலே உல்லாச வாழ்வு வாழ்கிறார்கள் — ஊதாரித்தனமாகச் செலவிடுகிறார்கள்—என்றெல்லாம் கேலி கலந்தக் கண்டனத்தை வீசி, ஏழை மக்களிடம் ஏற்றம் பெற்ற இந்தக் காங்கிரசுக் கனவான்கள்தான், இன்று கோடைகாலத்தில் நீலமலைக்குப் போவதை, வாழ்த்துகிறார்கள் —உளம் பூரிக்க வரவேற்கின்றார்கள்!

நீலமலையில் சட்டமன்றக் கூட்டம் நடத்தவேண்டும் என்பது குறித்து, மேற்படி தொகுதியின் பிரதிநிதி, சட்ட மன்றத்தில் வெளியிட்டுள்ள உருக்கமான வேண்டுகோள், உறுப்பினர் அனைவர் உள்ளத்தையும் உருக்குவதாக இருக்கிறது.

சட்டசபைக்கூட்டம் நீலமலையில் கோடைகாலத்தில் கூட்டப்படுவதின் மூலம்தான், நீலமலையின் பொருளாதாரம் சீரடையும், அப்பகுதிவாழ் மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கக் கூடும் என்ற கருத்தை அப்பிரதிநிதி வெளியிட்டுள்ளார். பரிதாபம்! காங்கிரசு ஆட்சியில் நீலமலை மக்களின் வாழ்வு எவ்வாறு சீரழிக்கப்பட்டு கிடக்கிறது என்ற உண்மை அவர் பேச்சின்மூலம் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்க்கட்சியினர் ஒத்துழைத்து ஒரே மனதுடன் முடிவு கட்டினால்தான் நீலமலையில் சட்டமன்றக் கூட்டம் நடத்துவது பற்றி தீர்மானிக்கப்படும் என்று, அரசாங்க சார்பில் நிதி அமைச்சர் விளக்கமளித்துள்ளார். நீலமலை சுகத்தை அனுபவிக்க காங்கிரசு அமைச்சர்களும் — கட்சியினரும் தயாராக இருக்கின்றனர் என்ற உண்மை, நிதி அமைச்சர் விளக்கத்திலிருந்து தெள்ளத்தெளிய தெரிந்துவிட்டது.

பத்தாண்டுகளுக்கு முன், இதே தொடர்பில் காங்கிரசுக் கட்சியினர் கண்களுக்குத் தெரிந்த வறண்ட வாழ்வினர், இன்று மறைந்தே போய்விட்டனர். பறட்டைத் தலையர்களை முன்வைத்து அன்றைய அரசாங்கத்தின் நீலமலை வாசத்தைக் கண்டித்த அதே காங்கிரசு கனவான்கள், இன்று மலைவாசம் தேடும் கட்டத்திற்கு வந்து நிற்கின்றனர். அதை நிறைவேற்ற, ஒத்துழைப்பளிக்கும்படி எதிர்க் கட்சியினரை வேண்டவும் செய்கின்றனர்.

நீலமலை வாசத்தின் அருமை பெருமைகளை, அதனால் விளையும் நல்விளைவுகள் ஏதாவது இருக்கும்பட்சத்தில் அதனையும், பொதுமக்களிடம் விளக்கிக் காட்டி பிரசாரம் செய்ய அமைச்சர்கள் முன்வரவேண்டும். அதுதான் மக்களாட்சி முறைக்கு உகந்ததாகும்.

பத்தே ஆண்டுகளில் காங்கிரசுத் தலைவர்கள் பெற்றுள்ள அபாரமான அனுபவத்தைத்தான் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மனமாற்றங்கள் காட்டுகின்றன. இன்னும் சில ஆண்டுகளுக்குள், இன்று தங்களால் முழுமூச்சுடன் எதிர்க்கப்படுகின்ற பல கோட்பாடுகளை, தாங்களே வலியவந்து ஆதரிக்க காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த நிலையும் வராமல் இருக்கப்போவது கிடையாது.

## அரிசி விலை இறங்கி வருகிறதாம்!

தென் அரிசி மண்டலம் அமைக்கப்பட்டானபிறகு, அரிசி விலை இறங்கி வருவதாக டெல்லி சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருக்கிறதாம்!

ஆந்திராவில் அரிசி விலை மூட்டை ஒன்றுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் இறங்கி யிருக்கிறதாம்!

உணவு இலாகா உதவி மந்திரி ஏ. எம். தாமஸ், மக்கள் சபையில் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

## அரிசி ஆலைகளை ஒழிக்க சிபாரிசு

### ஏற்பதற்கு டில்லி மறுத்துவிட்டது

புதுடில்லி, ஜூலை 17—

'நெல்லை அரைத்து, அரிசியாக்கும் ஆலைகளை ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஒழித்துவிட வேண்டும்; மாநில அரசுகள், கைக்குத்தல் அரிசிக்கு ஊக்கம்தர வேண்டும்' என்று, குழு ஒன்று செய்த சிபாரிசினை ஏற்க டில்லி சர்க்கார் மறுத்துவிட்டதாக உதவி உணவு மந்திரி தாமஸ் தெரிவித்திருக்கிறார்.

சிபாரிசினை நிராகரிப்பதற்கு முன், மாநில அரசுகளின் கருத்தும் அறியப்பட்டது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

குழுவின் சிபாரிசுகள் மக்கள் சபை முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

## சங்கரன் கோவிலில் பிரயாணிகள் தங்குமிடம்

### ஏற்படுத்தும் நோக்கம் இப்போது கிடையாதாம்

சென்னை, ஜூலை, 16—

சங்கரன் கோவில் பகுதிகளில் உல்லாசப் பிரயாணிகள் தங்குமிடம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கம் இப்போது இல்லை என்றும், மூன்றாவது திட்ட காலத்தில் கவனிக்கப்படலாம் என்றும் அமைச்சர் சட்ட சபையில் தெரிவித்தார்.

## முற்றிப்போன க்ஷயரோகத்திற்கு புதிய மருந்து!

சிட்னி, ஜூலை 16—

முற்றிப்போய் விட்ட க்ஷயரோகத்தையும் குணப்படுத்தக் கூடிய புது மருந்து ஒன்றினைக் கண்டுபிடித்து, ஆஸ்திரேலிய மருத்துவர்கள் இப்போது, சில மாகாணங்களில் அவற்றைப் பரீட்சித்து வருகிறார்கள் என்று கூறப்படுகிறது.

'வொராஜோட்' என்று பெயரிடப்பட்டிருக்கும் அம்மருந்து, மாத்திரை ரூபத்தில் உள்ளது. நோயாளிகளுக்குத் தரப்படும் போது, 'அது ஒரு புது மருந்து,' என்று கூறாமல் கொடுத்து பரீட்சித்து வருவதாகவும், இந்த ஆண்டு முடிவில் பரீட்சையின் விளைவு தெரியும் என்றும் கூறப்படுகிறது.

## சளிக் காய்ச்சலைத் தடுக்க ஊசி மருந்து!

### விஞ்ஞானிகள் புதிய சாதனை?

வாஷிங்டன், ஜூலை 13—

"ஆசியாவில் ஏற்பட்டுள்ள புதிய 'இன்புளுயன்சா' எனும் நச்சுக் காய்ச்சல் நோயைத் தடுக்கக்கூடிய புது ஊசி மருந்து ஒன்றை அமெரிக்க சுகாதார இலாகா விஞ்ஞானிகள் அபிவிருத்தி செய்துவருகின்றனர்; சில மாதங்களில் அது தயாராகிவிடும் என அவர்கள் நம்புகின்றனர்" என்று செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

கடும் சுரம், வாட்டு இருமல், உடம்புவலி ஆகியவற்றை ஏற்படுத்தும் இந்நோய் இவ்வாண்டு துவக்கத்தில் ஆசியாவில் பரவிற்று. அது ஓர் புதிய நச்சு நோயாதலால் அதனைத் தடை செய்ய உலகமெங்கணுமுள்ள மக்களின் உடம்பில் 'எதிர்ப்புக் கிருமி'கள் இருக்கவில்லை. தற்பொழுது தயாரிக்கப்பட்டுவரும் 'வாக்ஸீன்'எனும் அப்புதிய ஊசி மருந்து, மனித உடம்பில் எதிர்ப்புக் கிருமிகளை உற்பத்தி செய்யக் கூடியவையாகும்.

## மீனவர்களுக்குக் குடியிருப்புவசதியாம்!

தஞ்சை மாவட்டத்தில் கடற்கரை யோரத்தில் உள்ள அதிராம்பட்டினம், மாலிபட்டினம், திருமுல்லைவாசல் ஆகிய ஊர்களில் வாழும் மீனவர்களுக்கு வீடுகட்டித் தருவதற்கு ரூ. 2,45,000 கொடுக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ்வுதவியுடன் ஒவ்வொரு வீடும் ரூ. 850 செலவில் கட்டப்படும் அச்செலவில் ரூ. 500 அரசாங்கம் மானியமாக வழங்கும். பாக்கித் தொகையை மீனவர்கள் உழைப்பின் மூலம் கொடுக்க வேண்டும்.

## 'சொந்த மொழி போலவே ஆங்கிலத்தை காப்பாற்றவேண்டும்'

### 'அது நமது கடமையுமாகும்'

### பம்பாய் கவர்னர் பிரகாசா கருத்து

"நமது சொந்த மொழிகளுள் ஒன்றாகவே கருதி ஆங்கிலத்தை நாம் காப்பாற்ற வேண்டும்"

என்று, பம்பாய் கவர்னர் ஸ்ரீ பிரகாசா, திட்டக் குழுவின் கல்விப் பிரிவின் இரண்டாவது கூட்டத் தொடரை பூனாவில் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஆங்கிலம் நம் நாட்டில் கடந்த 300 ஆண்டுகளாக இருந்து வருகிறது; நாம் இந்த மகத்தான செல்வத்தை எதிர்காலத்தில் இழந்துவிடுவோமேயானால், அது மிகப் பரிதாபத்திற்குரியதாகும்.

ஆங்கிலத்தின் மூலம்தான் நாம் பல துறைகளிலும் அறிவினைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம்; வெளி உலகினை அறிந்து கொள்ளவும் ஆங்கிலம்தான் துணை நின்றிருக்கிறது; அதேபோல நம்மைப் பற்றி வெளியுலகம் அறிந்து கொள்ளவும் உதவியிருக்கிறது.

"நாம் ஆங்கிலத்திற்கு மிகவும் கடப்பாடு உடையவர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது,"

என்றும் பிரகாசா குறிப்பிட்டிருக்கிறார்.

# ‘ஆயுதப் போலீசார் வாழ்க்கைத்தரம் உயர ஆவன செய்க’

## ‘நேர்மையான நிர்வாகம் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்’

### சட்டசபையில் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி எஸ். எம். அண்ணாமலை ஆகியோர் கோரிக்கை

சென்னை, ஜூலை 16—

போலீஸ் இலாகா நிர்வாகத்திற்காக ரூ. 5,28,90,600 மானிய மாக ஒதுக்கவேண்டும் என்று உள்நாட்டு இலாகா அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் சட்டசபையில் கோரினார்.

வெட்டுப் பிரரேபணையின்மீது கழக உறுப்பினர்களான தோழர்கள் எம். பி. சாரதி, ஏ. கோவிந்தசாமி, எஸ். எம். அண்ணாமலை, க. அன்பழகன் ஆகியோர் பேசுகையில் பல அரிய கருத்துக்களைத் தந்தனர்; அவைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

தோழர் எம். பி. சாரதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“போலீஸ் நடமாட்டம் அதிகமாக உள்ள வேலூரைச் சேர்ந்தவன் என்ற முறையில் இந்த வெட்டுப் பிரரேபணைமீது ஒரு சில வார்த்தைகள்கூற விரும்புகிறேன்.

“போலீஸ் உருவாகும் இடமே வேலூர்; அதனால் நான் போலீசாருடன் அதிகம் பழகி அவர்களின் குறைகளை அறிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

“விசேட ஆயுதப் போலீசார், மற்றவர்களைவிட அதிகம் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி சரியாக அமையவில்லை; ஓலை குடிசைகளில் குடும்பத்துடன் வாழமுடியாத நிலையில் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் குறைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்துதர வேண்டும்.

“சப்-இன்ஸ்பெக்டர்கள் போலீஸ் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

“வேலூர் கோட்டை திடலில் முன்பு பொதுக்கூட்டங்கள் கூட்டுவதற்கு வசதியாக இருந்தது; இப்போது அங்கு அனுமதி தரப்படுவதில்லை. ஒலிபெருக்கி அமைப்பதற்கு இப்போது ரூ. 3 கட்டணம் வசூலிக்கப்படுகிறது; இதை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

“முன்பு, தலைமை கான்ஸ்டபிள் பதவியிலிருந்தவர்களை சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு உயர்த்தினார்கள்; ஆனால் இப்போது ‘தகுதிவாய்ந்தவர்கள் — பயிற்சி பெற்றவர்கள் கிடைத்துவிட்டனர்’ என்று காரணம் காட்டி அவர்களை மீண்டும் தலைமை கான்ஸ்டபிள் பதவிக்கு மாற்றி இருக்கிறார்கள்; இதனால் அவர்கள், மீண்டும் போலீஸ் உடை போடுவதற்கு வெட்கப்படுகிறார்கள். இதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும்.”

★

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“அமைதியை நிலைநாட்டவும், பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் போலீஸ் படை தேவைப்படுகிறது. ஆனால் அவர்களுக்குப் பல குறைகள் உள்ளன; அவர்களுக்கு நல்ல ஊதியம் இல்லை; அதனால் அவர்கள் குடும்பத்தை நல்ல முறையில் காப்பாற்ற முடியவில்லை.

“அவர்களுக்குக் குறைந்தது ரூ. 100 சம்பளம் தரப்பட வேண்டும். அதோடு விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு பஞ்சப்படி, வீட்டு வாடகைப் படி, பிரயாணப் படி முதலியன தரப்பட வேண்டும்.

“போலீசாருக்குப் போதுமான அளவிற்கு உடுப்பு தரப்படுவதில்லை; அதனால் அவர்களுக்கு வீண் செலவு ஏற்படுகிறது. மேல் அதிகாரிகள் பார்வையிடும்போது அவர்களால் சுத்தமாக இருக்க முடிவதில்லை.

“இந்த இலாகாவில் பலர், 10 ஆண்டுக் காலம் உழைத்தும் வேலை வாய்ப்பு உறுதி பெறாத நிலைமையிலேயே உள்ளனர்; அவர்களைக் கவனிக்க வேண்டும்.

“அவர்களுக்குப் பெரிய வீடுகள் தரப்பட வேண்டும். ‘தனிப் படி’யாக நாள் ஒன்றுக்கு 1-8-0-க்குக் குறையாமல் தரப்படவேண்டும்.

“போலீசார் எப்போதும் ஆளும் கட்சிக்குத்தான் ஆதரவாக இருப்பார்கள். தேவிகுளம், பீர்மேடு பறிபோவதைக் கண்டித்து எல்லா முற்போக்குக் கட்சிகளும் ஒன்றுகூடி வெற்றிகரமாக நடத்திய கடையடைப்பின்போது என் மீது ‘கொள்ளை’க் குற்றம் சாட்டி வழக்கு தொடர்ந்தனர் ஆளும் கட்சியின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு கற்பிக்கப் பட்டது. இந்த ஏப்ரலில்தான், ‘நான் குற்றவாளியல்ல’ என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

“இதை எதற்காகக் குறிப்பிடுகிறேனென்றால், அப்படித் தவறாக நடந்துகொண்ட அதிகாரி மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? எடுக்க உத்தேசம் உண்டா?—என்பதற்காகத்தான்.

“பேச்சு சுதந்திரம் வாங்கித் தந்தவர்கள் என்று பெருமை பேசுகிறவர்கள், எதிர்க்கட்சிகள் கூட்டம் போடுவதற்குகூட வசதியான இடங்களை ஏற்படுத்தவில்லை என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். பெரிய லாரிகளில்கூட ஒலிபெருக்கி அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்; சில சமயங்களில் அனுமதி இல்லாமலே செய்கிறார்கள்.

“தேர்தலில் வாகனங்களை உபயோகிக்கக்கூடாது என்று விதி இருந்தும் மீறப்பட்டிருக்கிறது; போலீசாருக்கு இதைச் சுட்டிக் காட்டியபோது அவர்கள், ‘தடுத்து நிறுத்துவதற்கு எங்களுக்கு அதிகாரமில்லை’ என்று கூறிவிட்டனர். ‘இதுதான் போலீசார் மக்களுக்கு செய்யும் கடமையா?’ என்று, கேட்க ஆசைப்படுகிறேன்.”

★

தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“வெள்ளைக்காரன் தன் ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ள சதி வழக்குகள் போட்டது எல்லோருக்கும் தெரிந்ததே. இன்றையக் காங்கிரசும் தன் ஆட்சியை நிலை நிறுத்திக்கொள்ள அதே முறையைக் கையாண்டுவருகிறது; ஆட்சியாளருக்குப் போலீஸ் கை ஆயுதமாக உள்ளது.

“1950-ல், வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயிகள் நடத்திய கிளர்ச்சியின்போது, யாரோ ஒருவன் தீ வைத்ததற்காக, மூவர் மீது சதி வழக்கு போட்டார்கள்; அதில் அரசாங்கம் தோல்வியுற்றது. நான் போட்டி சர்க்கார் நடத்த முயற்சிப்பதாக வழக்கு போட்டார்கள்; ஆனால் இதில் தோல்வியைக் கண்டார்கள்.

“அமைதியைக் காப்பதே போலீசாரின் கடமையாகும்; அதை அவர்கள் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. 1954-ல் போலீசார் பலாத்காரமாகக் கற்பழித்த 20 பெண்கள் ரெவினியூ அமைச்சரை நேரில் கண்டு முறையிட்டனர்.

“கடந்த ஏப்ரல் வரை என் பெயர்கூட ‘கேடி’ என்ற பட்டியலில் இருந்தது என்றால், போலீசாரின் கடமையைப் பற்றி என்ன கூறுவது?

“சட்டம் நியாயமானதாக இருக்கவேண்டும். அதை எப்போது, எப்படி பயன்படுத்துவது என்று போலீசாருக்கு தெரிய வேண்டும்.

“பல போலீஸ் அதிகாரிகள் மீது கூறப்படும் இலஞ்ச ஊழல் பற்றிய புகார்களைப் பற்றி விசாரணை நடத்தவேண்டும். அவர்கள் பதவிக்கு வருவதற்கு முன்பு இருந்த சொத்தையும் இப்போது அவர்களுக்கு உள்ள சொத்தின் மதிப்பீட்டையும் ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்துள்ளவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★

தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“பொதுமக்களுக்கு தக்க பாதுகாப்பளிக்க மிகவும் அவசியமான இந்த் போலீஸ் இலாகாவை நாங்கள் எப்போதும் ஆதரிப்பவர்கள் என்பதை நாடறியும். அந்தப் போலீஸ் படையைச் சேர்ந்தவர்களின் சிறந்த சேவையை மதித்து, அவர்கள் குறைகளைக் களைந்தெறிய வேண்டும் என்று நாங்கள் நெடுநாட்களாகக்கூறி வந்துள்ளோம். ஆனால் அதே போலீஸ் சில சமயங்களில் ஆளும் கட்சியினருக்குச் சாதகமாக ஆதரவு அளித்துவருவதையும் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. அவர்கள் எவ்வாறு ஆளும் கட்சிக்கு உதவிபுரிகின்றனர் என்பதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன்.

“நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஸ்ரீபெரும்புதூரில் போட்டியிட்ட ஒரு சாதாரணமான தோழரை வழிமறித்து அவருடைய காரை நிறுத்தி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கியுள்ளனர். அதன் பிறகு அவர் போலீசில் முறையிட்டும், அது குறித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்குத் துணிவு பிறக்கவில்லை. இதனால், தொடர்ந்து ஆளும் கட்சியினருக்கும் அவருக்கும் மோதுதல் ஏற்பட்டது. இப்போது போலீஸ் அமைச்சராக உள்ளவரே அங்கு ஆளும் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டார் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நாட்டுமக்கள் குற்றம் செய்யக்கூடாது என்ற நோக்கத்திற்கே போலீஸ் பணியாற்றுகிறது. மக்கள் சூதாடக்கூடாது; கொலை, களவு புரியக்கூடாது; கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடாது; சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் —என்றே போலீஸ் பாதுகாப்புடன் பணியாற்றி வருகிறது. அதுவே அவர்களின் முக்கிய கடமையுமாகும். ஆனால், இந்த பொறுப்பைத் தட்டிக்கழித்து, அவர்களே தவறு செய்வது மிகவும் கேடுபயப்பதாகும். இந்தப் போக்கு, மக்களைத் தவறான வழியில் செல்வதற்கு தூண்டுவது போலாகிறது.

“அண்மையில் அமைச்சர் பேசுகையில், ‘தவறு செய்யாத ஒருவர்கூட தண்டிக்கப்படக்கூடாது’ என்று கூறியதை நான் வரவேற்கிறேன். எப்படி அமைச்சர்கள் அணியும் வெள்ளை சட்டையில் உள்ள ஒரு ‘கறை’யைப் போக்கி சட்டையை சுத்தப்படுத்த வேண்டும் என்று கருதுகிறார்களோ, அதே போன்று, நல்ல ஆட்சியில், சமுதாயத்திலே உள்ள குற்றவாளிகளையும் அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

“போலீஸ் அதிகாரிகள் தவறாக நடந்துகொள்கிறார்கள் என்று கூறினால்—அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டால், என்னைப் பொறுத்தவரையில் ஆதாரங்கள் கூற எங்களுக்கு அவசியமில்லை என்றே கூறுவேன். பருத்திச் சூதாட்டத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அதைத் தடுத்து ஒழிக்கமுற்பட்ட அதிகாரிகள், இன்று வேறு இடத்திற்கு மாற்றப்படுவதாக நான் கேள்விபட்டேன்; இது பெரிய தவறாகும்.

“போலீசில் மேல் பதவியில் இருப்பவர்கள் ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் ஆதரவாக நடந்துகொண்டாலும் உயர் பதவிக்கு உரியவர்களாக ஆக்கப்படுவது மிகவும் வருந்தத்தக்கது. நான் இதைக்கூற அஞ்சவுமில்லை—அடங்கிப் பேசவும் விரும்பவில்லை. போலீஸ் இலாகாவின் ரிகார்டுகளை புரட்டிப் பார்த்தாலே இது புரியும். இத்தகைய மனப்பான்மை நிலவுவது நல்லதல்ல. இது நல்லாட்சிக்கும், நாட்டுக்கும் நல்லதாகாது.

“போலீசை சரிகட்டினால் எதையும் செய்யலாம்—சூதாடலாம்—பருத்திச் சூதாட்டம் நடத்தலாம்—கள்ளச் சாராயம் காய்ச்சலாம் என்ற நிலை நீடிக்கக்கூடாது. இந்த நிலைக்கு யாரோ சில அதிகாரிகள் காரணம் என்பதை உணரவேண்டும்.

“படமுதலாளிகள் வீட்டில் அவர்கள் நண்பர்களாகவும், விருந்தினராகவும் — படமுதலாளிகள் வீட்டில் தரப்படும் விருந்தில் என்ன இருக்கும் என்று நான் கூறத் தேவையில்லை—போலீஸ் அதிகாரிகள் கலந்துகொள்வதை கண்காணிக்கவேண்டும்.

“ஓடும் இரயிலில் தனிப் பெட்டியில் அமர்ந்துகொண்டு, கதவைத் தாளிட்டுக்கொண்டும் போலீஸ் அதிகாரிகள், பிரயாணிகள் அஞ்ச வேண்டிய அளவிற்கு நடந்து கொள்கிறார்கள். முன்னாள் சென்னை கவர்னர் பிரகாசா அவர்கள் ஒரு போலீஸ் அதிகாரியைப் பற்றி உள்நாட்டு இலாகாவுக்கு அனுப்பிய தாக்கீதைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது?

“இலட்சக்கணக்கில்மதிப்புள்ள வீடும், சொத்தும் உள்ள அதிகாரிகள் எப்படி வாழ்க்கையில் உயர்ந்தார்கள் என்று மக்கள் நினைப்பதில் தவறில்லை.

“இதை யார் கண்டிப்பது? யார் விளக்குவது? யார் நடவடிக்கை எடுப்பது? அரசாங்கம் கடமையை செய்ய முற்பட வேண்டாமா? அது கடமையல்லவா?

“இப்போது போலீஸ் அமைச்சராக உள்ளவர் அனுபவம் பெற்றவர். அவர் பொது நிர்மாண இலாகாவை சீர்திருத்தியவர் என்ற கூறப்படுகிறது. இப்போது அத்தகையவர் மேற்பார்வையில் உள்ள போலீஸ் இலாகாவை சீர்திருத்துவது நேர்மையல்லவா? அந்த யோக்கியதை இந்த அரசாங்கத்திற்கு உண்டா என்று கேட்கிறேன்.

“இப்போது எஸ்.ஏ.பி.படையில் உள்ளவர்கள் மிகவும் இன்னல்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் வாழ முடியாமல் வேதனைப்படுகின்றனர். அவர்கள் குடியிருக்க நல்ல வீடுகள் இல்லை. அவர்களுக்குத் தரப்படும் ஊதியம் மிக மிகக் குறைவு. ஒரு மாதத்திற்கு ரூ. 48 ‘படி’யாகத் தரப்படுகிறது. அவர்கள் எப்படி வாழ்வார்கள்? அவர்கள் மனிதர்கள் அல்லவா? அவர்களும் பிள்ளைகுட்டிகளுடன் வாழ வேண்டாமா? அவர்கள் தானே ஆளும் கட்சியையும் அமைச்சர்களையும் பாதுகாக்கும் பொறுப்பைப் பெற்றவர்கள்? அவர்களுடைய குறைகளைக் களைந்து வாழ வழி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.”

விவாத முடிவில் வெட்டுப் பிரரேபணை தோல்வியுற, மானியக் கோரிக்கைநிறைவேற்றப்பட்டது.

---

# பழிவாங்கும் நிலைமை ஏன்?

## ஓட்டல் முதலாளியின் செய்கைக்குக் கண்டனம்

### கன்னியாகுமரி மாவட்ட ஓட்டல் தொழிலாளர் யூனியன் தீர்மானம்

குளச்சல், ஜூலை 15—

7—7—57 இரவு 11 மணிக்கு குளச்சல் தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் பி. எம். கண்ணு தலைமையில் மேற்படி சங்க உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. நகரிலுள்ள ஓட்டல் தொழிலாளர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தலைவர் தமது தலைமையுரையில் ஓட்டல் தொழிலாளர்களின் நிலைமைகளையும், தொழிலாளிகளை முதலாளிகள் மிகவும் கீழ்த்தரமாக நடத்தி வருகின்ற முறைகளையும், தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதற்கான வழிவகைகளையும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய முறைகளையும் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டார்.

தோழர் எஸ். எம். சாகுல் அமீது பேசுகையில் ‘தொழிலாளர்கள் ஒன்று படுவதன்மூலம் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும், இன்றுள்ள அவலநிலையைப் போக்குவதற்குமான சூழ்நிலையை உருவாக்க இயலும்’ என்றார்.

பின்னர், தோழர்கள் ஏ. என். மீரான், வி. பி. அசன் ஆகியோர் பேசினர்.

பின்னர் யூனியன் துணைத் தலைவர் எஸ். எம். அனீபா கீழ்க் காணும் தீர்மானத்தை வாசித்த போது, கூட்டம் ஒருமனதோடு நிறைவேற்றியது.

“குளச்சல் ‘முபாரக்’ ஓட்டலில் பணியாற்றி வந்த வி. பி. அசன் என்னும் தோழரை ஓட்டல் தொழிலாளர் யூனியனோடு தொடர்பு கொண்டுள்ள காரணத்திற்காக, வேலையைவிட்டு நீக்கிய முதலாளியின் போக்கினைக் கண்டிப்பதோடு, வேலை யிழந்த தோழருக்கு உடனடியாக வேலை கொடுக்குமாறு ஓட்டல் முதலாளியை கேட்டுக்கொண்டும் இந்நிலைமை நீடித்தால், தொழிலாளியின் உரிமைகளைப் பெறுவதற்கான முறைகளை மேற்கொள்வதன்மூலம் வேலையிழந்த தொழிலாளியின் நஷ்டங்களுக்கு மேற்படி ஓட்டல் முதலாளியே பொறுப்பாளியாவார்” என்று இந்த யூனியன் தெரிவித்துக் கொள்கிறது.

---

# அன்பளிப்புகள்

தெ. ஆ. மாவட்டம் சங்கரா புரம் தோழர் கண்ணுசாமி தோழியர் பத்மா திருமண நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

ஏ. வி. எம். ஸ்டுடியோ தொழிலாளர் தோழர் இரங்காதன் அவர்களது பெண் மகவுக்கு அண்ணா அவர்களால் ‘செல்வி’ எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

28—6—57-ல் புதுவண்ணை—வள்ளுவர் இளைஞர் மன்றச் செயலாளர் தோழர் க. கிருட்டிணமூர்த்தியின் துணைவியார் தோழியர் பேபி ஓர் ஆண்மகவுக்குத் தாயானார். தாயும்—சேயும் நலம். இதன் நினைவாக ‘நம்நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப் பாகத் தரப்பட்டது.

* * *

9—7—57-ல், சீரங்கம் தோழர் சி சன்னாசி—தோழியர் பி. காந்தம் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது; இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

# ‘ஆரம்பக் கல்வியின் ‘தரம்’ நிச்சயமாகக் குறைந்துள்ளது’

## ‘தமிழ் நாட்டில் முப்பது இலட்சம் பேர்களுக்கா இலவசக் கல்வி?’

### ‘இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு போதுமானதா?’

### சட்டசபையில் எம். பி. சுப்பிரமணியம், சி. நடராசன் ஆகியோர் கருத்துரை

சென்னை, ஜூலை 17—

சென்னை சட்டசபையில் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கல்வி செலவினங்களுக்காக ரூ. 11,73,63,100 மானியமாகத் தரவேண்டும் என்று கோரினார்.

அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தைப் பற்றி விவாதிக்கப்பட்டபோது, தி. மு. கழக சட்டசபைக் கட்சி செயலாளர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்தார்; அதை ஆதரித்து தோழர் சி. நடராசன் அவர்கள் பேசினார்; அவர்களுடைய கருத்துக்கள் இங்கு தரப்படுகிறது :—

வெட்டுப் பிரேபணையை முன்மொழிந்து தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“கல்வி அமைச்சர் தந்துள்ள அறிக்கையிலிருந்தும், அவர் ஆற்றிய உரையிலிருந்தும், 1934-க்குப் பிறகு கல்வித் துறையில் நமது மாநிலம் மிகவும் முன்னேறி உள்ளது என்பதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்த வளர்ச்சி மட்டும் உள்ள பிரச்சினையை தீர்ப்பதாகாது.

“இந்திய அரசியல் சட்டத்தில், ‘1960-க்குள் கட்டாய இலவசக் கல்வி எல்லோருக்கும் தரப்படவேண்டும்’ என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கம் இதை எப்படி நிறைவேற்றுவது என்று ஆராய்வதற்கு குழு ஒன்றை ஏற்படுத்திப் பரிசீலனை செய்துவருகிறது.

“கல்வி அமைச்சர், நமது மாநிலத்தில் மட்டும் 30 இலட்சம் பேர்களுக்கு 1960-க்குள் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்று கூறினார். இது 1960-க்குள் நடைபெறக்கூடிய காரியமா என்று பார்த்தால், நமது மாநிலத்தில் உள்ள நிதி வசதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நிச்சயமாக நடைபெறாத ஒன்றாகத்தான் தோன்றுகிறது. இப்போது கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது; மேலும் பல கோடி ரூபாய் செலவிட வேண்டும்; அந்த அளவிற்கு நமது மாநில அரசாங்கத்திற்கு வசதி இல்லை என்பது தெரிந்ததேயாகும்.

“எனவே, இதை ஒரு மாநிலப் பிரச்சினையாக அணுகாமல், தேசியப் பிரச்சினையாக ஏற்று, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, பொருள் உதவி பெற வேண்டியது நமது மாநில அரசாங்கத்தின் கடமையாகும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

“முதியோர் கல்வித் திட்டத்தைத் தீவிரமாகவும், பரவலாகவும், விரிவாகவும் ஏற்று நடத்துவதன் மூலம் அடுத்த தலைமுறையிலாவது நாட்டில் எல்லோரும் கல்வி கற்றவர்களாக இருக்கக் கூடும்.

“இப்போதையகல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று ஒரு சிலரும், இதற்கு மாறாக வேறு சிலரும் கருத்தை தெரிவித்துள்ளனர்; அது எப்படி இருந்தாலும், இந்த மாநிலத்தில் ஆரம்பக் கல்வியின் தரம் மட்டும் நிச்சயம் குறைந்துள்ளது என்று நான் கூறவிரும்புகிறேன்.

“ஐந்தாம் வகுப்பில் படிப்பவர்களுக்குச் சரியாக எழுதவும், படிக்கவும் தெரியாத நிலையிருக்கும்போது, நூல் நூற்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துவது அவசியமில்லை என்றே கூறுகிறேன். அப்படி நூல் நூற்கவாவது பிள்ளைகளுக்குத் தெரிகிறதா என்று பார்த்தால், பல இடங்களில் மாணவர்கள் கடையில் விற்கப்படும் நூலை வாங்கி பள்ளியில் கணக்கு காட்டிவருகின்றனர் என்ற நிலையைக் கொண்டே இதை ஒருவாறு நாம் புரிந்துகொள்ளலாம்.

“டிப்டி-இன்ஸ்பெக்டர்கள் அதிகப்படியான பள்ளிகளைப் பார்வையிடவேண்டியுள்ளதால் அவர்களால் சரிவர வேலை செய்ய முடிவதில்லை. 30, 40 பள்ளிகளுக்கு அதிகமாக ஒரு டிப்டி-இன்ஸ்பெக்டர் மேற்பார்வையில் இருக்கக்கூடாது. மாவட்ட கல்வி அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு ‘ஜீப்’ கார் வசதிகள் செய்துதர வேண்டும்.

“பள்ளி புத்தக நிர்ணயக் குழுவில் அனுபவம் பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்.

“படித்தும் வேலையற்று உள்ளவர்களுக்கு வேலை தேடித்தரும் நோக்கத்துடன் துவக்கப்பட்ட ஓராசிரியர் பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு இப்போது இரண்டாண்டு காலம் பயிற்சி பெறவேண்டும் என்று கூறுவது அவசியமில்லாததாகும். அவர்களுக்குத் தரப்படும் ஊதியப் போதுமானதல்ல. சில ஆண்டுகள் உழைத்து அனுபவம் பெற்றவர்கள் என்பதால் அவர்களுக்குப் பயிற்சி அவசியம் என்றால் ஓராண்டு போதும் என்றே கருதுகிறேன். இப்போது மாதம் ரூ. 50, 60 ஊதியம் பெறும் ஓராசிரியர்கள், பயிற்சி காலத்தில் ரூ. 15 மட்டுமே உதவிச் சம்பளம் பெற உரியவர்கள் என்பது அவர்கள் வாழ்வைப் பாதிக்கும்.

“மத்திய அரசாங்கம் உதவியளிக்கவில்லை என்பதற்காக ஓராசிரியர்களுக்கு ஊதியமோ, சலுகையோ தரமுடியாது என்று கூறுவது நியாயமாகாது. மாநில அரசாங்கமே தன் நிதியிலிருந்தும், மாவட்ட ஆட்சி மன்றங்களின் நிதியிலிருந்தும் அவர்களுடைய வாழ்க்கைக்கு வசதி செய்து தரவேண்டும்.

“சில உயர்தரப்பள்ளிகளில் இப்போது 1,000, 1,500 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்கள் மாணவர்களுடன் பழகி, நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களைத் திருத்த முடிவதில்லை. மேலும், பல உயர்தரப் பள்ளிகளைத் துவக்கி, மாணவர்களின் எண்ணிக்கையைப் பள்ளிகளில் குறைக்கவேண்டும்.

“கல்லூரிகளில் ஆங்கிலத்தில் பாடம் கற்றுத்தரப்படுவதால் பள்ளி மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, கல்லூரிகளில் தமிழ் மொழியில் கல்வி கற்றுத்தரத்தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் தீவிரமாக செய்ய வேண்டும்.

“அரசியல் கட்சிகள் மாணவர்களிடம் தொடர்பு கொள்ளக் கூடாது என்று கூறுபவர்களுக்கு நான் காங்கிரஸ் பேரவையின் பொதுச்செயலாளர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கூறிய கருத்துக்கள் செய்தித்தாள்களில் வெளியானதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ‘காங்கிரஸ் கொள்கைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் புகவேண்டும்; அதற்காகக் காங்கிரஸ்காரர்கள் பாடுபடவேண்டும்’—என்று அவர் கூறியுள்ளார். நமது மாநிலத்தில் மாணவர்கள், ஆளும் கட்சியிடம் மதிப்பு வைக்காத காரணத்தினால் தான் இங்கு இப்படிப் பேசப்படுகிறது என்று கருதுகிறேன்; இது சரியல்ல.

“என்னுடைய தொகுதியான சேலம் மாவட்டம் கல்வியில் பிற்போக்கான நிலையில் உள்ளது சேலம் மக்கள் தொகையையும். இங்குள்ள 20-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் கொண்டு பார்த்தால் அங்கு இருக்கும் ஒரே ஒரு கல்லூரி போதுமானதல்ல என்ற உண்மை தெரியவரும்.

“அங்குள்ள பணக்காரர்கள் தனிப்பட்ட முறையில் கல்லூரிகள் துவங்க முன்வராததால் அரசாங்கமே ஆவனசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.”

★

வெட்டுப் பிரேரணையை ஆதரித்து கழக உறுப்பினர் தோழர் சி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்; ஆனால், அவர்களுடைய நிலையைப் பார்க்கும்போது மிகவும் வருத்தமாக உள்ளது. அவர்களுக்குத் தரப்படும் குறைந்த ஊதியத்தில் அவர்களால் சாதாரண வசதியுடன்கூட வாழமுடியவில்லை.

‘அவர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டிகள்; அவர்களால் நல்ல முறையில் உடை அணிய முடிவதில்லை. அவர்களுக்கு ஒரே மாதிரியான உடையை தருவதற்கு அரசாங்கமே முன்வர வேண்டும்.

“பள்ளிகளில் வெவ்வேறு புத்தகங்கள் வைக்கப்படுகின்றன; எங்கும் ஒரே மாதிரியான புத்தகங்கள் வைக்கப்பட வேண்டும்.

“பல்கலைக் கழகங்கள் பெரிய நகரங்களில் மட்டுமே ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கருதுபவர்களுக்கு, காந்தியார் கிராம முன்னேற்றத்தைப்பற்றி கூறியதை மனதில் கொள்ளவேண்டும் என்றுகூற ஆசைப்படுகிறேன்.

“மாணவர்கள் எல்லாக் கட்சி பத்திரிகைகளையும் படிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்; அது தான் அவர்கள் நல்லதைத் தெரிந்து கொள்வதற்கு வழியாகும்.

“கணவன்—மனைவியாக உள்ள ஆசிரியர்களை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றுவதுகூடாது; சில இடங்களில் இவ்வாறு பிரிக்கப்படுகிறார்கள்; அதைச் சர்க்கார் கவனித்து ஆவனசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.”

## கழகக் கூட்டங்கள்

★

மேலூர் வட்டம்—
கோட்டநத்தம்பட்டி :
வள்ளுவர் திடலில்
20—7—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
என். வி. நடராசன்
எஸ். எஸ். தென்னரசு

★

முசிறி :
காந்தி நகர்
20—6—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர் :
நாஞ்சில்-கி. மனோகரன்
பெ. முத்துக்கருப்பன்
தங்கமணி

### சொற்பயிற்சிக் கூட்டம்

19—7—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—இராயபுரம் பி. சி. பி. ரோடிலுள்ள நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றத்தில் ‘மன்றமும்—கடமையும்’ எனும் பொருள்குறித்து, தோழர் கி. ந. மதிவாணன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் இங்கர்சால், அன்பானந்தன், முனுசாமி மற்றும் பலர் பேசுவர்.




# சட்டசபையில் அண்ணா கருத்துரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எப்படி செலவழிப்பது என்று கருத வேண்டும்.

“உண்ட சோறு ஜீரணித்தால்தான் உடலுக்கு வலிவு ஏற்படும் என்று எவ்வாறு கருதப்படுகிறதோ அதே போன்று, ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுமையிலும் செலவழிக்கப்பட்டால்தான் எதிர்பார்த்த பலன் உண்மையில் ஏற்படும்.

“ஆரம்பக் கல்விக்குப் பிறகு பலர் மேல்படிப்புக்குச் செல்லுவதில்லை என்றால் அவர்களுக்கு செலவழித்த பணம் வீணாகிறது

“நான் அறிந்தவரை—இப்படிச் சொல்லும்போது அடக்கத்துடன், புள்ளி விவரங்கள் எதிர்க்கட்சிகளிடம் இல்லாத காரணத்தின் காரணமாகவும்—ஆரம்பக் கல்வி திட்டம் எதிர்பார்த்த பலனை தரவில்லை என்றே கூற விரும்புகிறேன்.

“கல்வித்துறை அடிக்கடி பரீட்சை பார்க்கக்கூடியதல்ல! கல்வி வாழ்நாள் முழுவதும் சமுதாயத்திற்குப் பயன்படுவதாகும்.

“ஆதாரக் கல்வியைப் பற்றி நிதி அமைச்சர் பேசுகையில், ‘ஆதாரக் கல்விதான் அரசாங்கத்தின் கொள்கை,’ என்று வலியுறுத்தினார்; ‘நீங்கள் என்ன கூறினாலும் எத்தனை குற்றம் குறைகள் சொன்னாலும், ஆதாரக் கல்விதான் அரசாங்கத்தின் மாற்றமுடியாத கொள்கையாகும்,’ என்ற அடிப்படையில்தான் அவர் பேசினார்.

“நாங்கள் சாமானியமானவர்கள்—நாங்கள் சொல்வதை ஏற்க வேண்டாம்; திட்டக் குழுவின் தலைவர் டாக்டர் கோஷ், ஆதாரக் கல்வியைப் பற்றிக் கூறியுள்ளதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்—பள்ளிகளின் தரமும், ஆசிரியர்களின் தரமும் உயரவேண்டியது அவசியமாகும்; சில மாநிலங்களில் ‘கிராம சுயராஜ்யத்தை’ உறுதிப்படுத்துவதாகவே ஆதாரக் கல்வியுள்ளது,’ என்று அவர் கூறியுள்ளார். இதை மனதில் கொண்டு, மத்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து ஆதாரக் கல்வி பற்றி நம் சர்க்கார் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

“ஆதாரக் கல்வி முறையின் படி, நம் எதிர்கால சமுதாயம், ‘கிராம சுயராஜ்ய’த்திற்காகத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது; இதுதான் முடிவு என்றால் நாம் இன்று, நவீன விஞ்ஞானத் தொழில் துறைகளில் பெருந் தொகைகளைச் செலவிடுவது அனைத்தும் வீணாகத்தானே ஆகிவிடும்?

“பண்டித நேருவும் கனரகத் தொழில் வளர்ச்சி பற்றியும், அணுசக்தியை தொழில் அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்வது பற்றியும் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார். ஒரு புறம் விஞ்ஞானத்திலும் தொழில் வளர்ச்சிப் படிப்பிலும் கவனம் செலுத்தி, மற்றொருபுறத்தில் நமது எதிர்கால சமுதாயத்தை ‘கிராம சுயராஜ்யத்’திற்குத் தயார் செய்வதைக் கண்டு திகைக்க வேண்டியிருக்கிறது.

## அறிவிப்பு

“மாயூரம் வட்டச் செயலாளர் கேட்டிருந்தபடி இந்தத் திங்கள் 16-ந்தேதி முதல் 21-ந்தேதி வரை கொடுத்திருந்த கூட்டங்களுக்கான வசதியை காலா காலத்தில் செய்து கொடுக்காத காரணத்தால் மேற்படி 6 கூட்டங்களையும் ரத்துசெய்ய வேண்டியதாயிற்று என்பதை, சாத்தனூர், கிளியனூர், மாயூரம், செம்பனார் கோயில் தோழர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறேன்.”

அன்பன்
சி. பி. சிற்றரசு

“தொழில் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு கல்வியைத் திருத்தி அமைக்க வேண்டும்; தொழில் கல்வி முன்னேற வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அந்தத் துறையில் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 10 சம்பளம் என்று தருவது உபாயமாகாது; அது நாட்டுக்கும் நல்லதல்ல—அரசாங்கத்திற்கும் கண்ணியமானதல்ல!

“இந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்தவர்களே அறிவாளிகள்; தமிழ் மூலம் பலவற்றைப் படிக்க இயலாது என்று நிலவி வரும் மனப்பான்மையை மாற்றி, பேரரசர் முதல் பெருநில மக்கள் காலம்வரையில் எல்லாத் துறையிலும் பொலிவோடும் வலிவோடும் விளங்கி வரும் தமிழால் பயிற்சியும் நிர்வாகமும் நடைபெற இயலும் என்பதை எடுத்துக்காட்டும் பொறுப்பு நிதி அமைச்சரைச் சார்ந்துள்ளது; அதை அவர் திறமையோடு செய்து முடிப்பார் என்று நம்புகிறேன்.

“பல்கலைக் கழகத்திலும் பாடங்களைத் தமிழில் கற்றுத்தர வேண்டும் என்பதை நான் பெரிதும் விரும்புகிறேன்; அதற்காக முயற்சி செய்ய முன்வந்துள்ள அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.”

### ‘ஸ்க்ரூ லூஸ்’......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யிருக்கிறார்கள்; அதனால்தான் வாக்குகள் பதிவாகவில்லை’ என்று கூறியிருக்கிறார்!

உடனே ஒரு உறுப்பினர், ‘இதற்கு ‘ஸ்க்ரூ லூசா’க இருந்ததே காரணமாயிருக்கலாம்’ என்று கூறியபோது, சபையில் சிரிப்பொலி கேட்டது!

‘இருக்கலாம்; எங்கேயோ மறை கழண்டிருக்கிறது’ என்று துணைத் தலைவர் கூறியதும், மீண்டும் சிரிப்புக் கிளம்பியதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.